**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2016**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையிலும் வருமானச் செலவினக் கணக்கிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகள் (பெறுமானத்தேய்வு கொள்கை தவிர) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 5,356,315 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு ரூபா 330,705 ஆக இருந்த போதும் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 406,411 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 75,706 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பெறுமதி ரூபா 101,208 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு ரூபா 49,606 ஆக இருந்த போதும் ரூபா 112,108 என வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 62,502 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பெறுமதி ரூபா 6,802 ஆல் கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தொலைபேசி கோபுர வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்த காரணத்தினால் 05 கோபுரங்களுக்காக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 525,833 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ஐந்தொகையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு ரூபா 18,284,101 தொகை சொத்துக்களுக்கு சீராக்கப்பட்டிருந்த போதும் வருமானச் செலவினக் கணக்கிற்கு அது செலவினமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 347,682,015 கூட்டுப்பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பன பேணப்படாதிருந்தமையால் கணக்காய்வின் போது சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நடைமுறையல்லாத பொறுப்புக்கள் ரூபா 348,638,234 தொகை தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள் மற்றும் அட்டவணைகள் என்பன பேணப்படாதிருந்தமையால் அவற்றின் சரியானதன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(இ) ரூபா 5,129,165 கூட்டுப்பெறுமதியான நுழைவுச் சீட்டு வருமானம் தொடர்பாக பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வருமான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| i. நிதிப்பிரமாணம் 237(ஆ) | ரூபா 270,720 பெறுமதியான நுழைவுச் சிட்டு புத்தகங்களுக்காக உறுதிச்சீட்டுக்களில் இருப்புச் சான்றிதழ்கள் உள்ளடக்கப்படாதிருந் ததுடன் இருப்பு பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ii நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் காட்டும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 218,799 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 617,658 ஆக காணப்பட்டதால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 398,859 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் ii ஆம் பகுதியின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பில் சேவை புரியும் அனைத்து ஊழியர்களுக்கும் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு நிறுவனம் கடப்பாட்டினைக் கொண்டிருந்த போதும்

மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட மூன்று ஊழியர்களிடமிருந்து பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சகல வசதிகளைுடன் கூடிய 02 சுற்றுலா விடுதிகள் நிதியத்திற்கு சொந்தமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அச்சுற்றுலா விடுதிகளுக்கு செல்லும் வீதிகளை திருத்தியமைப்பதற்காக ரூபா 608,000 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் சுற்றுலா கவர்ச்சியை அதிகரிக்கும் வகையில் விரிவான விளம்பரமொன்றை வழங்காமை காரணமாக மீளாய்வாண்டின் போது அச்சுற்றுலா விடுதிகளிலிருந்து எவ்வித வருமானமும் உழைக்கக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரித்தில்லாத இரண்டு வாகனங்களை திருத்தம் செய்வதற்காகவும் பராமரிப்பதற்காகவும் நிதியத்தினால் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 180,358 கூட்டுத்தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பழைய கட்டிடத்தினை திருத்தியமைப்பதற்காக ரூபா 5,313,884 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்தல், உடன்படிக்கை கைச்சாத்திடல், மதிப்பீடு செய்த பெறுமதி மற்றும் இணங்கிய பெறுமதிகளுக்கு இடையே அசாதாரண விலை விலகலொன்று காணப்பட்டமை மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.3. இனங்காணப்பட்ட நட்டங்கள்

முன்னைய ஆண்டில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக கொடுப்பனவு தாமதமாகிய காரணத்தினால் ரூபா 290,444 தொகையும் மீளாய்வாண்டின் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் கொடுப்பனவு தாமதமாகியதால் மீளாய்வாண்டில் ரூபா 17,206 ஆன மிகை கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 செயலாற்றல்

2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (அ) முதல் (க) வரையான 20 நோக்கங்களில் 5 விடயங்கள் தவிர ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் எவ்வித நடவடிக்கையொன்றையும் எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பொது நம்பிக்கையாளரினால் பேணப்படும் பேரேட்டின் பிரகாரம் அம்புலுவாவ நம்பிக்கை நிதியத்திற்காக முன்னைய ஆண்டுகளில் மூலதன செலவினத்திற்காக ரூபா 2,600,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் அச்செலவினம் இனங்காணப்பட்டு நிதியத்தினால் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) கணக்கீடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிர்வாகம்